சிவமயம்

ed as a News paper in Ceylon
P. M. G. NO. H. A 89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருக] யாழ்ப்பாணம்—வியஹு பங்குனிமீ உசுஉ (1947 ஏப்பிரல் 8 செவ்வாய்க்கிழமை) [இல ௩

## ஸ்ரீ சத்தியோசாத சிவாசாரியர்

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்

முற்றொடர்

பரிதாபி ஹூ (1942ல்) நடந்த வயலூர்க் கும்பாபிஷேகப் பத்திரிகையைக் கண்ணுற்ற சிவாசாரியர் வழக்கம்போல் சாஸ்திராசங்கை என்னும் பத்திரிகையைத் கற்புருஷசிவன் என்ற கையெழுத்தோடு வெளிப்படுத்தினர். திருவையாற்றிலிருந்த ஸ்ரீகணபதி சிவாசாரியரின் சிஷ்யராயுள்ள இரத்தினசல சிவாசாரியர் "சாஸ்திராசங்கை நிவிர்த்தி" என்பதன் மூலம் சிவாசாரியரது பத்திரிகையைத் தகளாக்கிவிட்டார். ஈசான சிவாசாரியர் பெயரோடு அவர் கூறிய சாஸ்திர விதிகள் வயலூர்ச் சுப்பிரமணிய சுவாமி கும்பாபிஷேகத்துக்கு உபயோகப்படாதென்றும், குகப் பெருமானுக்குக் குமாரதந்திர விதிப்படி நடத்த வேண்டுமென்றும சநற்குமாரப்பிரச்ன குமார தந்திரத்தை உண்டாக்கி அதன்மூலமாகச் சாஸ்திராசங்கை நிவிர்த்தியைக் கண்டனஞ் செய்யப் புறப்பட்டார். இந்த அவதார புருஷரால் நவீனமாக அசிதாகமமொன்று உண்டாயிற்று. பின் குமாரதந்திரமுந் தோன்றியது.

திருவாவடுதுறை வைத்தியநாதக் குருக்களும் பிறரும், பிரதிட்டாகாரிகை சிவஞானபாயமாக வெளியிடப்பட்டதென்று கூறினர்கள், சிவாசாரியருடைய சிருஷ்டி வேலைகள் இவ்வளவில் நின்றுவிடவில்லை. பிரதிஷ்டாகாரிகைக்கு மூலாகமப் பிரமாணம் வேண்டப்பட்டது. உடனே ஆக்க ஆரம்பித்துக் காமிகாகமத்தை மாதாந்த சஞ்சிகையாகப் பிரகடனஞ்செய்தார். காமிகாகமம் இரண்டாகிவிட்டது. எத்தனையோபேர் வரவழைத்தார்கள். அழகப்ப முதலியார் அச்சிட்ட காமிகாகமமே மடாலயங்களிலுள்ள புத்தகசாலைகளிலும் குருமாரிடத்திலும் ஏட்டுப் பிரதியாகவுமிருக்கிறது. அதற்கும் இவரச்சிட்ட காமிகத்துக்கும் ஒரு அக்ஷரங்கூட ஒற்றுமையில்லை. முழுவதுங் கற்பிதம். கற்பிதாகமத்துக்கு இவரே ஸ்ரீகண்ட பரமசிவன். சிவாசாரியர் முதனூலாகிய ஸ்ரீமத் காமிகாகமத்தைச் சுமார்த்தர்கள் கட்டியது என்றும், சாத்தர் கட்டியது என்றும், நீக்கப்படத்தக்கது என்றும் புலம்புகின்றனர்.

தொல்லாசிரியர்கள் எத்தனையோ கிரந்தங்களையும் சங்கிரக நூல்களையும் வியாக்கியானங்களையும் செய்திருக்கிறார்கள். அவைகளொன்றிலாவது இவருடைய அசிதாகம காமிகாகமக் கருத்துக்களேனும் வாக்கியங்களேனும் காணப்படவில்லை.

இவருக்கு உதவியாயிருந்தவர்கள் பூதலூர்ச் சுப்பிரமணிய சிவாசாரியர் முதலியோராவர். அவர்களும் இவரைக் கைவிட்டார்கள். திருவாவடுதுறை ஆதீனத்து மஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள் இவருக்கு உதவிவந்த பணத்தை அறுபது ரூபாயிலிருந்து பிந்து (0) வாக்கிவிட்டார். ஆசாரியபுருடர் பின்னர் வேத நிந்தனையிலும் இறங்கினர். யோகானந்த சுவாமி என்னும் பிராமண சந்நியாசியினால் கண்டிக்கப்பட்டார். சந்நியாசி சிவாகம நிந்தனைசெய்ததமையும் காசிவாசி செந்திநாதையராற் கண்டிக்கப்பட்டமையும் விஸ்தாரபயத்தினால் எழுதப்படவில்லை.

சத்தியோசாதருடைய காமிகாகமத்தின் முதற் சுலோக முதற்பகுதியை ஆராய்வாம். ஸ்ரீதட்சிண கைலாசத்தில் ஆலமரத்தின்கீழ் வீற்றிருந்து கௌசிகர் முதலியோருக்கு ஸ்ரீகண்டர் காமிகாகமத்தை உபதேசித்தாரென்று பாடத்தொடங்குகின்றார். தென்கயிலை மூன்று; அவை திரிகோணமலையும் திருக்காளத்தியும் திரிசிராப்பள்ளியுமாம். இந்த மூன்றனுள் எந்தத் தென் கைலையிலிருந்து உபதேசித்தாரென்று கூறினாரல்லர். "ஸ்ரீமத் தக்ஷிணகைலாசே" (ஸ்ரீமத் தக்ஷிண கைலாசத்தில்) என்று பாடியிருப்பதை, "கைலாச தக்ஷிணே சிருங்கே" (கைலாச தட்சிண சிகரபாகத்தில்) என்று மூலாகமத்திற் கூறியாங்குப் பாடியிருப்பின் பொருத்தமாயிருக்கும். தெய்வச் செயலால் முதலிலேயே கோணலாகிவிட்டது இவர் புத்தகங்களிலுள்ள பூர்வாபர விரோதங்களும் திருத்தமுடியாத அபத்த சுலோகங்களும் மநந்தம். சிவாகமங்களுக்கு பூரணக இவர் செய்த விஷயங்களிற் சிலவற்றை ஆராய்வோம்.

அம்சுமான் ஆகமத்தில்: கிரியா பேதத்தினால் சூத்திரபேதம் மூன்றாகுமெனவும், அவை மனுசூத்திரம் இரவிசூத்திரம் தசசூத்திரமாகுமெனவும் எல்லாப் பிரதிமாத் தாபனங்களிலும் ரவிசூத்திரமிட்டு மண்டபம் அமைக்கலாம் எனவும், காரணாகமத்தில் விமானத்தாபனம் திரிசூலத்தாபனங்களிலே ரவிசூத்திரம் போடலாமெனவுங் கூறப்பட்டிருக்கிறது. இங்ஙனமாகவும் பிரதிஷ்டையில் ரவிசூத்திரமண்டபம் போடுதல் கூடாதெனவும், அமைத்தால் உலகம் அழிந்துபோம் என்றும் சத்தியோசாதர் பயமுறுத்துகின்றார். சத்தியோசாதர் எழுதியதை நம்பித்தான்போலும ச. பொ. குருக்களும், "கலாசூத்திரம் அதமமும் மனுசூத்திரம் அதமாதமமுமெனவும், ரவிசூத்திர மண்டபாதிகள் பிரதிட்டைக்குப் போடுதல் கூடாது" எனவும் இப்பத்திரிகையில் வெளியிட்டு மோசம்போயினர். சத்தியோசாதர் உண்டாக்கிய நூல்களைத் தவிர எந்தச் சிவாகமங்களிலாவது யாகசாலைக்குக் கலாசூத்திரம் போட விதியுண்டா?

பிராணப்பிரதிஷ்டை நூதிகாதியாசம் என்பவைகள் பிரதிஷ்டையிற் செய்யப்படவேண்டுமென்று சிவாகமங்கள் வற்புறுத்தியிருக்க, பச்சாம் பேட்டையார் பிராணப்பிரதிஷ்டை நூதிகாதியாசங்களைச் சாத்தசமயிகளுக்குரியவையென்று விலக்கி, அவற்றைச் சைவர்கள் செய்யின் நிஷ்பலமாகுமென்று எழுதுகின்றாரே! பிரதிஷ்டாகாரிகை ஆகமத்துக்கு முரணில்லாதது என்று வாய்ப்பறையடிக்கும் குருமாரும், பிராணப்பிரதிஷ்டையைக் கிரமமாகச் செய்து கொண்டுதான் வருகிறார்கள்,

## தமிழின் எதிர்காலம்

### 'ஐக்கிய தேசியக் கட்சியிடம் கேளுங்கள்'

(நமது நிருபர்)

வரவிருக்கும் தேசாளுமன்றத்தில் ஆட்சி பெறப்போகும் ஐ. தே. கட்சியில் சேரும் ஒவ்வொரு தமிழ்மகனும் கேட்கவேண்டியது என்னவென்றால் "ஆங்கிலம் அரசாங்க பாஷையாயில்லாத காலத்து சிங்களத்துடன் தமிழுக்கும் சமவுரிமை கொடுத்து அதையெவ்விதத்திலேனும் நிலைகுன்றாவண்ணம் பாதுகாக்க முன்வருவீர்களா? என்பதுதான்" என்று திரு. இராமலிங்கமவர்கள் 'தமிழின் நிலைமை' விஷயம் பற்றி மானிப்பாய் 'இந்து இளைஞர் இயக்கம்" இரண்டாவதுகூட்டத்தில் (1-4-47) பேசும்பொழுது கூறினார்.

இக்கூட்டத்துக்கு திரு. நாகையா அவர்கள் தலைமை வகித்தார்.

மேலும் பேச்சாளர் தொடர்ந்து பேசுகையில் தமிழிற்குப் பரசமயிகளால் விளையும் இடையூறுகளையும், அரசாங்கத்தால் விளையும் இடையூறுகளையும், அரசாங்கத்தால் விளையும் இன்னல்களையும் கூறி, இவைகளை இயன்றளவில் இச்சங்கத்தினர் நிவிர்த்திசெய்ய முன்வர வேண்டுமென்றுங் கூறினர்.

பின்னர், இலங்கைவாழ் தமிழருக்கென ஓர் தமிழ்ச் சர்வகலாசாலை அவசரம் வேண்டுமென்றும் இப்பொழுது இக்கலாசாலையின்மையால் தமிழ் மாணவர்கள் தம் தமிழறிவை வளர்க்கமுடியாது கஷ்டப்படுவதையும் எடுத்துக்கூறி இதனையும நம்மரசாங்கத்தினர் கைகூட்டி வைப்பின் உண்மையில், தமிழின் நிலை சிறக்குமென்றும் கூறிமுடித்தார்.

## ஆசிய ஸ்தாபனம்

### அமைக்கப்படவிருக்கிறது

புதுடெல்கியில் ஆசிய மக்கள் மகாநாடு மிகவும் வெற்றிகரமாக நடந்து முடிந்துவிட்டது. இந்த மகாநாட்டின் பயனாக, ஆசியநாடுகளுக்கென ஓர் ஸ்தாபனம் இருக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அந்த ஸ்தாபனம் கூடிய சீக்கிரம அமைக்கப்படும், அதற்கான பிரமாணங்களை வகுத்து ஏற்ற நடைவடிக்கைகளை ஆற்றும்வரை, ஸ்தாபனத்துக் காரியாலய விஷயங்களைக் கவனிக்கச் சில உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த உத்தியோகத்தர்களுக்கு வேண்டிய கட்டளைகளைப் பிறப்பிக்க ஓர் நிருவாகசபை நியமிக்கப்பட்டிருக்கிறது, நிருவாகசபையின் அங்கத்தவர்கள் பின்வருவோராவர்: பண்டிதர்நேரு (தலைவர்), ஸ்ரீ. B. ஷிவராவ் இந்தியா) மிஸ்ரர் ஹான் லிஹூ (சீனம்) இவர்களிருவரும் காரியதரிசிகள்; மிஸ்ரர் அலி அஷ்கார் ஹெக்மாத் (பேர்ஸியா), மிஸ்ரர் S. W. R. D. பண்டாரநாயக்கா (இலங்கை) மிஸ்ரர் சியாமன்ற் (பர்மா) டக்ரர் அபு ஹனீபா (இந்தனேஷியா).

தலைவர் தம் குறிப்புரையில், சர்வகலாசாலை நிறுவுவதற்குப் பெரியோர் எப்பொழுதும் ஆலோசித்துத்தான் வருகின்றனரென்றும், அதற்கு அவர்கள் பரமேசுவரக் கல்லூரியையே கலாசாலையாக மாற்ற எண்ணுகின்றனரென்றும், எனவே இது சில காலத்துள் கைகூடுமென்றும் கூறினார்.

பின்னர் சபை தன் முதன் நோக்கான சமயவளர்ச்சிக்கேற்றதொண்டு புரியும்வண்ணம் ஆலோசித்து இறுதியில் வாகீசர் குருபூசையைச் சித்திரை மாதம் 4-ம்தேதி அதிவிமரிசையாக நடப்பிக்க ஏற்றுக்கொண்டது,

## ஆலயங்களிற் பலியிடுதல்

[—: பசுபதி :—]

வேனிற்காலம் பிறந்தவுடன் வேள்வி என்ற ஒலியே நாடுபக்கங்களில் கேட்கின்றது. சைவவித்தியாசாலைகளும், சைவப்பிரசங்கங்களும் கல்வியறிவும் அதிகமாயுள்ள இக்காலத்திலும் இவ்வறியாமை நீங்காமை பேராச்சரியமே. இழிவான பெயரை உண்டாக்குவனவற்றில் வேள்வியுமொன்றே.

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை"

சமயங்கள் எல்லாவற்றிலும் சீவகாருண்ணியத்தைப் பெரிதும் பரிபாலித்து வரும் சமயம், திவ்விய சமயமாகிய எங்கள் சைவசமயமேயாம். எத்துணைத்தீங்குதான் ஒருவனுக்கு நேரிட்டகாலத்தும், யாதோருயிருக்குச் சிறிதேனும் துன்பம் விளைத்தல் கூடாதென்பதும், எவ்வுயிரையும் தன்னுயிர்போல் பேணிநடத்தல் வேண்டும் என்பதும் சைவசமயத்தால் வலியுறுத்தப்படும் பரமசத்தியங்களாம். இங்ஙனமாகவும் எத்தனையோ சன்மங்களிற் செய்து கொண்ட புண்ணியமேலீட்டால் இத்திவ்விய சைவசமயத்தில் பிறக்கும் பெரும்பேற்றைப் பெற்றுக்கொண்ட நம்மவர்கள். எங்கள் சமயத்தால் பெரிதும் போதிக்கப்படும் இச்சீவகாருண்ணியத்தைச் சிறிதும்பொருட்படுத்தாது அதற்கு முற்றும் மாறாகவுள்ள சீவக்கொலையை அனுசரித்து வருதல் எவ்வளவு அறியாமை. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சமயத்தைப் பெருமைப்படுத்துமாறு பெருமுயற்சிகள் செய்துவரும் இக்காலத்தில், எங்கள் சமயிகள் மாத்திரம் எங்கள் சமயத்துக்கு மாறான இக்கொடிய செய்கையைக் கைவிடாது இன்னும் செய்து வருவரேல் எங்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஞ
பங்குனிமீ உசுவ செவ்வாய்க்கிழமை

## போகிற வருகிற வருடங்கள்

இப்பொழுது நிகழும் வருடமாகிய வியவருடம் வருகிற ஞாயிற்றுக்கிழமை (13-4-47) இரவு முடிவெய்தும். இந்த வருடத்தில் நிகழ்ந்த நன்மை தீமைகளுட் பிரதானமானவற்றை வழக்கம்போற் தொகுத்துக் காட்டுவது முறையாகும்; இந்த வருடத்திலே அரசியல் விஷயமாக ஆராயுங்கால், இலங்கை மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் சுயராச்சியம் பெறுதற்காகிய அறிகுறிகள் ஆரம்பத்தில் உண்டாக, இந்திய மக்கள் இப்பொழுது பூரண சுயராச்சியத்தைப் பெறும் பேற்றை யடைதலாயினர்; இங்ஙனம் பூரண சுயராச்சியத்தைப் பெறும் விஷயத்தில் இந்தியாவிலே நடைபெற்றுவரும் கலகங்களும் உயிர்ச்சேதம் பொருட் சேதமும் முந்தி எந்த ஆண்டிலும் நிகழ்ந்ததென அறியப்படாதனவாகும்; மேலும் கலகங்களும் கொலை முதலிய அநர்த்தங்களும் இந்த வருடத்தில் முடிவுறாது அடுத்த வருடத்திலும் நடக்குமென எண்ணக்கிடக்கின்றன. இந்த இலங்கையிலும் தொழிலாளி முதலாளிகட்கிடையே பிணக்கும் தொழில் நிறுத்துஞ் செயலும் மாறிமாறி அதிகம் நிகழ்ந்ததும் நிகழ்வதும் இந்த வருடத்திற்றெனலாம்; இச்செயலும் இந்த வருடத்தோடு முடிவு காணாது அடுத்த வருடத்திலும் தொடர்ந்து நிகழுமென எண்ணக் கிடக்கின்றது.

உலக யுத்தம் முடிந்தாலும் யுத்தத்திலே சிறைப்படுத்தப்பட்ட ஜர்மனிய தலைவர்கள் யப்பானிய தலைவர்கள் முதலான பகைவருட்பலர், வெற்றியடைந்தவர்களாகிய ஐக்கிய ராச்சிய அதிகாரிகளினால்யுத்தக்குற்றவாளிகளென விசாரணை செய்து சிறைவைக்கப்பட்டதும் கொலை செய்யப்பட்டதும் இந்த ஆண்டிலேயாகும்; கொலை துணிகரமான களவு மதுபானம் சண்டை பெரியோரைச் சிறியோர் மதியாமை முதலிய அநர்த்தங்களும் ஏனைய ஆண்டுகளைக் காட்டிலும் இந்த ஆண்டில் அதிகமெனலாம்.

கல்வி விருத்தி விஷயமாக ஆராயின், முன்னர் ஆங்கிலம் படிக்க முட்டுப்பட்டிருந்த பிள்ளைகள் இலவசக் கல்வி காரணமாக ஆங்கிலங் கற்கத் தொடங்கியதும், இங்குள்ள சைவகலாசாலைகளிற் சேர்ந்து படிக்கும் பிள்ளைகளின் தொகையும் படிக்க விரும்பிய பெற்றாரின் தொகையும் அதிகப்பட்டமையினால், அச் சைவப் பிள்ளைகளுட் பலர் படித்தற்குச் சைவப்பள்ளிக்கூடங்களில் இடமில்லையாக, அதனால் அப்பிள்ளைகள் அந்நிய சமயப் பள்ளிக்கூடங்களிற் சேர்ந்து படிக்கலாமென்று போக, அப்படிப்போகும் பிள்ளைகள் பள்ளிக்கூட அதிகாரிகளாகிய பாதிரிமாரின் நிபந்தனைகட்கெல்லாம் அமைந்தாற்றான் படிப்பித்தல்முடியுமென்றுசொல்லப்பட, சைவப் பிள்ளைகளுட் சிலர் சமயாபிமானத்தை விட்டுப் படிக்கத் தலைப்பட்டதும், பல பிள்ளைகள் தம் சமயத்திற்குப் பங்கம் வராமற் பாதுகாக்க வேண்டுமென அந்நியமதப் பள்ளிக்கூடங்களிற் சேராமல் விட்டதும், இந்தவருடத்திலேயேயாம்.

பொருள் பண்ட விஷயமாகச் சொல்லுங்கால், யுத்தம் நடந்த ஆண்டுகளிலும், யுத்தம் முடிந்த ஆண்டாகிய சென்ற ஆண்டிலும் அரிசி நெல் உடுபுடைவை என்னு மிவைகள் விஷயமாக சனங்களுக்கு இருந்த அற்ப சௌகரியங்கள் தாமும் இந்த வியவருடத்தில் இல்லாமற்போய்விட்டதெனலாம்; ஆனால் யுத்த காலத்தில் இங்கு வாராதிருந்த பல மேனாட்டுப் பொருள்கள் இந்தவருடந்தொட்டு இங்கு வந்து சேர்தலாயின; இவைகளே இந்த விய வருடத்தின் பிரதான நிகழ்ச்சிகளெனத்தக்கவை.

இனி, அடுத்துவரும் ஆண்டாகிய சர்வசித்து வருடத்தைச் சிந்திக்குமிடத்தில்

சருவசித்து தன்னிற் நலத்திற் பலவும்
ஒருபதி னேட்டுவித்து மோங்கும் —
பெருமையுடன்
மிக்க விளைவுண்டா மேன்மேலு
மாரியுண்டாந்
தக்க சுகம்பெருகுந் தான்.

என அவ்வருடத்தின் பொதுப் பலன் சொல்லப்பட்டிருக்கிறதெனினும், இலங்கைப் புதிய பாராளுமன்றத் தேர்தல் முதலியன நேரவிருத்தலின், இலங்கை மக்களுக் கிடையே வேற்றுமையும் பிணக்கும் மூளுமெனக் காத்திருக்கலாம். ஏனைய பலன்களை இருந்து பார்க்கவேண்டும்; ஆனால், தெய்வத்தில் நம்பிக்கை வைத்தோர்க்கு "....அவைநல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே" என்ற தமிழ்வேத வாக்கின்வண்ணம் எல்லா ஆண்டும் நல்லனவேயாகும்.

## சங்கீத கதாப்பிரசங்கம்

வண்-கிழக்கு அத்தியடிப் பிள்ளையார் கோவிலின் திருமுன்றிலில் வருகிற வியாழக்கிழமை (10-4-47) மாலை 6 மணி தொடக்கம் திருமுருக கிருபாநந்தவாரியவர்கள் பக்கவாத்திய சகிதமாக "திரு. இராமலிங்கசுவாமிகள்" என்னும் விஷயமாகப் பிரசங்கஞ் செய்வாரென அறியலானோம்.

## பருத்தித்துறையிற் கொலை

பருத்தித்துறை செம்பியன்பற்று என்னுமிடத்தைச் சேர்ந்த சின்னப்பொடியன் என்பவனை ஏழுபேர் சேர்ந்து கொலைபுரிந்ததாகக் கூறப்பட்ட வழக்கில் குற்றவாளிகளெனக் காணப்பட்ட ஏழுபேர்களையும் பருத்தித்துறைப் பொலிசைச் சேர்ந்த பரிசோதகர் நாயர் என்பவர் சிறைசெய்து நீதிபதிமுன் கொண்டு வந்தார். நீதிபதி ஏழு பேர்களையும் விளக்கமறியலில் [illegible] விட்டு வழக்கைத் [illegible]

# அன்பு! அதுவே வேண்டும்!

## ஆசிய மகாநாட்டில் மகாத்மா

"கேவலம் உலக யுத்தத்தில் திளைத்து மயங்கிக்கிடந்த மேனாடுகள் கடந்த இரண்டு யுத்தங்களின் பயனாக இன்று கண் திறந்துவிட்டன. இன்றைக்குத்தான் அவைக்குப் புத்திவந்தது. சத்தியம், சமாதானம் சமரசம் என்றெல்லாம் பேசுகின்றன" என்று மகாத்மாகாந்தியடிகள் சென்றவாரம் ஆசிய மக்கள் மகாநாட்டு இறுதிக் கூட்டத்திற் கூறினார். அவர் ஆங்குச் சமூகமளித்த பிரதிநிதிகளுக்கு ஆசி கூறுகையில், சாந்தி, சமாதானம், சமரசம் என்பவற்றை ஆதாரமாகக் கொண்ட ஓர்கொள்கையினைக்கடைப்பிடிக்க வேண்டும் என்று வேண்டினார். அவர் தொடர்ந்து கூறியதாவது:—

'உலகின் தலைசிறந்த மதங்கள் யாவும் கீழ்த்திசையிலேயே உதயமாகின. பார்சியர் கைக்கொள்ளும் மதஸ்தாபகரான ஸொராஸ்தர் பிறந்தது ஆசியாவில். புத்தபிரான் அவதரித்தது கீழ்த்திசையில், பாரதநாட்டில். மோசே பிறந்தது பலஸ்தீனத்தில் இதன்பின் கீழ்நாடு உலகிற்கு யேசுநாதரைத் தந்தது. அவரின்பின் நபிநாயகம் அவதரித்தார். ஸ்ரீகிருஷ்ணன் மகாவீரர் என்பவர்களும் கீழ்த்திசை ஈன்ற செல்வர்கள் தான்.

"இந்த மகாபெரிய புண்ணியவான்களுக்கு நிகராக எவரையும் சொல்ல முடியுமா? ஆனால இன்று உலகில் நிகழ்வது என்ன? கிறிஸ்துவமதத்தை மேனாட்டவர் கைக்கொண்டனர். அங்கே அவர்களால் கிறிஸ்து நாதரின் போதனைகள் திரித்துப் பங்கப்படுத்தப்பட்டன.

"ஐரோப்பிய நாகரிகம் மூலமாக எங்கள் புராதனமான, புனிதமான கீழ்நாட்டுக் கலைஞானத்தை, சமய சோதியை நாங்கள்பார்க்கமுடியாது. நீங்கள் மேனாடுகளுக்கு அறிவுறுத்த வேண்டுமானால், அது அன்பு, அகிம்சை என்பவற்றை ஆதாரமாகக் கொண்ட அறிவாக இருக்கவேண்டும்.

"எல்லா மக்களும் இன்புறவேண்டும். எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர் இனம்; எல்லாரும் ஓர் இறைவனின் சேயர்கள். அன்பு, சமரசம், சமாதானம் இதனைத்தான் நாமின்று உலகயுத்தத்தால் தவித்துககொண்டிருக்கும் மேனாடுகளுக்கு அளிக்க வேண்டும். அப்படிக் கொடுத்து அன்பின்மூலமே நாம் மேனாடுகளை வெற்றிகொள்ளவேண்டும்.

"இன்றுமேனாடுகள் அணுக்குண்டு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்றன. இந்த அணுக்குண்டு சர்வ நாசத்துக்குக் காரணம். யாருக்கு நாசம்? மேனாடுகளுக்கு மாத்திரமா? இல்லை! சர்வ உலகிற்குமேதான். இந்த நாச புத்தியைக் கீழ்நாட்டு மக்களாகிய நாம் அன்பின்மூலம் கெடுக்கவேண்டும்."

## சங்கீத கதாப்பிரசங்கம்

வல்லைச் சிவன்கோவில் அதிகாரிகள் உற்சவ உபயஞ் செய்வோருடைய வேண்டுகோட் கிணங்கிப்போலும் சென்னை "திருப்புகழமிர்த" ஆசிரியராகிய, திருமுருக கிருபானந்தவாரியவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து மேற்படி சிவன்கோவில் மகோற்சவகாலத்தில் நாள்தோறும் பக்கவாத்திய சகிதமாகச் சிறந்த பிரசங்கங்களைச் செய்வாராயினர்; இந்த அன்பருடைய பிரசங்கத்தை கேட்க வேண்டுமென ஆசைகொண்டு யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமுள்ள சைவமக்கள் வல்வைச் சிவாலயத்திற் சென்று பிரசங்கத்தைக்கேட்டு மகிழ்வாராயினர்; இப்பெரியார் "முருகன் பெருமை" என்னும் விஷயமாக வண் கிழக்கு அத்தியடிப்பிள்ளையார் கோவில் முன்றிலிற் சென்ற ஞாயிற்றுக்கிழமை 6-4-47) செய்த பிரசங்கத்தைக் கேட்கும்வண்ணம் இங்கிருந்தும் அயலூர்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான அன்பர்கள் சென்று குழுமினர்; திரு கிருபானந்தவாரியை நேரிற் பார்த்தவர்களும் அவர் செய்யும் பிரசங்கத்தை அப்படியே கேட்டவர்களும் அவரைப் பாராட்டாமலிருக்க முடியாதெனலாம். இவரிடத்துள்ள சிவவேடப் பொலிவும் பத்திரசம் ததும்ப விஷயங்களைத் திட்பநுட்பமாகக் கேட்போர் விளங்கும்படி எடுத்துச் சொல்லும் ஆற்றலும், திருப்புகழையும் ஏனைய திருப்பாக்களையும் ஓதும்போதுள்ள இசைச் சிறப்பும் இவரிடத்து விசேஷமாகவுள்ளன வெனலாம். திரு. கிருபானந்தவாரி போன்ற அறிஞர் செய்யும் பிரசங்கங்களால் இந்நாடு நன்மையடையுமெனல் திண்ணம்.

## சங்கக்கடைகள் "கூப்பன்" கடைகள்

வருகிற திங்கட்கிழமை (14-4-47) நிகழவிருக்கும் புதுவருட விடுதலை நாட்களையும் ஊரவர்களுடைய வசதியையும் உத்தேசித்துப் போலும் நமது கட்டுப்பாட்டதிகாரிகள், அடுத்த திங்கட்கிழமை தொடக்கம் கொடுக்கவேண்டிய கூப்பன் கட்டுப்பாட்டுப் பொருள்களாகிய அரிசி நெல் மா சீனி மிளகாய் முதலான சகல பொருள்களையும் முந்தியே கடைக்காரர்க்கு உதவச்செய்து, மேற்படி கடைக்காரர்கள் வருகிற வெள்ளி சனி ஞாயிற்றுக்கிழமைகளில் தம் கடைகளைத் திறந்து வைத்து ஊரவர்களுக்கு வழங்கத்தக்க சிறந்த ஒழுங்குகளைச் செய்திருக்கிறார்களென அறிந்து மகிழ்ச்சியுறுகின்றோம்; சங்கக்கடைக்காரர் கூப்பன்கடைக்காரர்களாகவுள்ளவர்கள் தாங்கள் அறியாமையினாலோ, இல்லையேல் ஊரவர்கட்கு விஷயம் விளங்காதென வெண்ணியே, குறித்த மூன்றுநாட்களிலும் பண்டங்களை ஊரவர்களுக்கு வழங்கத் தவறினால் ஊரவர்கள் அதனைக் கடைக்காரர்களுக்கு எடுத்துத் தெருட்டி அவர்களிடம் வேணுமான பண்டங்களைப் பெற்றுக் கொள்வார்களாக.

## கண்டகோடரியால் தாக்கினன்

துன்னாலை தெற்கைச் சேர்ந்த சுப்பன் பொன்னன், சுப்பன் மாணிக்கன், கந்தையன் கணபதி, சீனியன் ஆகியவர்கள் அதேயிடத்தைச் சேர்ந்த நாகன் நல்லான் என்பவனைக் கண்டகோடரியால் தாக்கியதாகக் குற்றஞ் சாட்டி பருத்தித்துறைப் பொலிஸ் பரிசோதகர் நாயர் ஒருவழக்கைத் தாக்கல் செய்தார். சுப்பன் பொன்னனை ரூபா 1000 பிணையில் போகுமாறு விடுத்து மற்றவர்களுக்கு விளக்கமறியல் (rest?)

இந்திய அரசியல்

# வெருட்ட வேண்டாம்!

## சர்தார் படேல் முழக்கம்

**வெருட்டவேண்டாம்**

பாகிஸ்தான் வேண்டுமானால் வெருட்டுமூலம் அதனைப்பெற முடியாது; நீதி, நியாயத்தை அடிப்படையாகக் கொண்டே அதனைப் பெறவேண்டும் என்று சர்தார் வல்லபாய் படேல், சென்றவாரம் ஆமதபாத்தில் நிகழ்ந்த ஓர் கூட்டத்திற் கூறினார். ஜின்னா சாய்பு, சமரசம், சமாதானம் என்றெல்லாம் பேசுகிறார். ஆனால் வாளைக் காட்டி ஹிந்துசமூகத்தையும் இந்தியாவையும் பயமுறுத்திக்கொண்டு சமாதானப் பேச்சுப் பேசுவதால் பயன் கிடைக்காது. முஸ்லிம் லீக் சொல்லுகிறபடிதான் காங்கிரஸ் நடக்கவேண்டும் என்று ஜின்னா கட்டளையிடுவதற்குக் காங்கிரஸ் ஓர்போதும் பணியமாட்டாது என்று சர்தார் கூறினர்.

●

**சமஸ்தானாதிபதிகள் நிலை**

இந்தியச்சமஸ்தானாதிபதிகள்முந்தி அரசியல் நிர்மாணசபையில் சேர்ந்து வேலைசெய்வதாகத் தீர்மானித்தனர். ஆனால், பிப்ரவரி மாதம் 20-ம் திகதி பிரிட்டிஷ் பிரதமர் விடுத்த அறிக்கையின் பின்னர், அவர்களிற் சிலர் அரசியல் நிர்மாணசபையிற் சேரத் தயக்கம் காட்டுகின்றனர். இவ்விஷயத்தைப்பற்றி ஓர் முடிவுசெய்யச் சமஸ்தானாதிபதிகள் கூட்டம் சென்றவாரம் நிகழ்ந்தது. விரும்பிய சமஸ்தானாதிபதிகள் எந்த நேரத்திலும் அரசியல் நிர்மாணசபையிற் சேரலாம் என்று ஈற்றில் முடிவு செய்யப்பட்டது.

●

**சவர்க்காரின் தந்தி**

பழைய புரட்சிவீரரும், ஹிந்து மகாசபைத் தலைவருமான வீரசவர்க்கார், இராஜப்பிரதிநிதி மவுண்ட்பேற்றனுக்கு ஓர் தந்தி யனுப்பியுள்ளார். இந்தியாவின் அரசியலை நிர்மாணிக்கும்போது, ஹிந்துக்களைப் பாதிக்கும் விஷயமாகக் காங்கிரசுடன்மாத்திரம் ஆலோசனைசெய்யலாகாது காங்கிரசுக்கு ஹிந்துக்கள்சார்பாகப்பேசயோக்கியதையில்லை. அகிலஇந்திய ஹிந்து மகாசபைத் தலைவருடனும், சீக்கியத் தலைவரான மாஸ்ரர் தாராசிங்குடனும் கலந்தாலோசித்பின்னரே ஹிந்துக்களைப் பாதிக்கும் விஷயங்கள் செய்யப்படவேண்டும் என்று அவர் அத்தந்தியிற் காட்டியுள்ளார்.

●

**இராணுவப் பங்கீடு**

1943-ம்ஆண்டு ஜூன்மாதம் பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு விலகப் போவதால், இந்தியாவில் இப்போது உள்ள இராணுவத்தை பாகிஸ்தானுக்கும் ஹிந்துஸ்தானுக்குமிடையே இப்போதே பங்கீடு செய்யவேண்டும் என்று முஸ்லிம்லீக் தலைவர்களில் ஒருவராய மிஸ்ரர்பிரோஸ்கான் நூன் ஓர்அறிக்கை விடுத்திருக்கிறார். இராணுவம் எவரிடம் ஒப்படைக்கப்படுமோ, அவர்களே இந்தியாவைப் பெறுவர் என்று மிஸ்ரர் நூன் கூறுகிறார்.

●

**சந்தித்தார்**

மகமதலி ஜின்னா சென்ற சனிக்கிழமை காலை இராஜப்பிரதிநிதிமவுன்ற் பேற்றன் பிரபுவைச் சந்தித்து ஏறக்குறைய 2 மணி நேரமாகச் சம்பாஷித்தார் என்று தெரிகிறது. இந்திய அரசியல் விஷயமாகப் பொதுவில்சம்பாஷணை நடைபெற்றதே ஒழிய விசேஷ அம்சம் எதுவும் விவாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. சம்பாஷணை மீண்டும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சென்ற ஞாயிற்றுக்கிழமை மிஸ்ரர் ஜின்னா இராஜப் பிரதிநிதியுடன் போசனம் அருந்தினர்.

●

**பாஞ்சாலப் பிரிவினை**

பாஞ்சாலச் சட்டசபையில் உள்ள சீக்கிய அங்கத்தவர்கள் அனைவரும் சென்றவாரம் கூடி, பாஞ்சாலப் பிரிவினை சம்பந்தமாக ஆலோசித்தனர். பாஞ்சாலத்தைக் கட்டாயம் பிரிக்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தைச் சகல அங்கத்தவர்களும் அங்கீகரித்தனர். பாஞ்சாலத்தைப் பிரித்துவிட்டால் என்ன செய்வதென்ற வேதனை இப்போது லீக்கர்க்குப் பெரும் குழப்பத்தைக் கொடுத்திருக்கிறது. பாஞ்சாலத்தின் முஸ்லிம்லீக் தலைவரான சர்தார் ஷவுகத்ஹயத்கான் என்பவர் சீக்கியர்க்கு ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அதில் பாஞ்சாலத்தில் கூட்டு மந்திரசபையே அமைக்க முஸ்லிம்லீக் அவாவுகிறது என்றும் அம்மந்திரசபையில் சீக்கியர்க்குப் போதிய பிரதிநிதித்துவமளிக்கப்படுமென்றும் அவர் அவ்வறிக்கையிற் குறிப்பிடுகின்றார்.

# இன்னும் 20 ஆண்டுகளா?

## அடுத்த யுத்தத்தின் தவணை

சென்ற கோரமான மகாயுத்தம் முடிந்து, அதன் எதிரொலி இன்னும் ஓயவில்லை. அதற்கிடையில் மூன்றுவது மகாயுத்தத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் செய்யப்படுகின்றன. இந்த மூன்றுவது உலக மகா யுத்தம் சோவியத் ருஷியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் இன்னும் 20 ஆண்டுகளுக் கிடையில் நிச்சயம் நடந்தேதீரும் என்று இங்கிலாந்தில், சுயேச்சைத்தொழிற்கட்சிமகாநாட்டில் சென்றவாரம் தலைமைவகித்த மிஸ்ரர் பாப் எட்வர்ட்ஸ் என்பவர் தம் தலைமைப் பிரசாரணத்திற் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

"சோவியத் ருஷியா, அமெரிக்கா என்னும் இந்த இரண்டு நாடுகளும் சகல விஷயங்களிலும் பரஸ்பரம் மாறுபட்டுக் கருமம் ஆற்றுகின்றன. அவற்றின் ஒவ்வொரு செயலும் பரஸ்பரம் விரோதமுள்ளதாக இருக்கிறது. இதன் பயனாக உலகில் உள்ள சாதியார் அனைவரும், இந்த இரண்டு வல்லரசுகளுக்கு மிடையே யுத்தம் நேரப்போகின்றதே என்று ஏக்கிக்கொண்டிருக்கின்றன.

"அமெரிக்கா, உலகம் முழுவதும் ராணுவத் தளங்களை அமைத்துக் கொண்டு வருகிறது. மனித நாகரிகத்துக்கே உலைவைக்கும் அணுக்குண்டுகளை மலை மலையாகக் குவித்து வருகிறது.

"இப்போ[illegible] அமெரிக்காவிலே, சவங்களைப் புதைக்கும் தொழிலாளர் ஓர் சங்கம் வைத்திருக்கிறார்கள். இச் சங்கத்தினர் ஓர் பத்திரிகை தம் பரஸ்பர நன்மைக்கு நடத்துகிறார்கள். அடுத்த யுத்தத்தில் அணுக்குண்டு தாக்கி இறப்பவர்களை எப்படிப் புதைக்கவேண்டும் என்பதைப் பற்றி இப்பத்திரிகையில் இப்போதே ஓர் கட்டுரை வெளியாகிவிட்டது. இதன் கருத்து என்ன? இது எதனைக் காட்டுகிறது?"

# இலங்கைக்கு நன்றி

## டக்ரர் ஷாரீர் பாராட்டு

இந்தனேஷியப் பிரதமர் டக்ரர் சுல்தான் ஷாரீர் இலங்கைமக்களுக்கு மிஸ்ரர் பண்டாரநாயக்கா மூலம் ஓர் செய்தி அனுப்பியுள்ளார். அது வருமாறு:

"இந்தனேஷியாவின் சுதந்திரப் போராட்ட காலத்தில், ஒல்லாந்த ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நாம் நின்று போராடியபோது, 'எங்கள் முயற்சிக்கு ஆதரவு தந்து, எங்களை ஊக்குவித்த இலங்கை மக்களுக்கு எங்கள் நன்றி யுரித்தாகுக."

# மா நிலைமை

## திருப்திகரமாம்!

இப்போது இலங்கையின் தேவைக்குப் போதிய மா இருப்பில் இருக்கிறதென்றும், அதனைப்பற்றிய கவலை வேண்டியதில்லை என்றும் தெரிகிறது. மா இருப்புக் குறைந்தபடியினால், ரொட்டி உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட அளவு குறைக்கப் பட்டிருந்தது. இப்போதுமா போதிய அளவு இருப்பில் இருப்பதால், ரொட்டிக்காரர்க்கு இனி, உள்ள அளவு விநியோகிக்கப்படும் என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

**சமதர்மிகள் கூட்டம்**

இலங்கைச் சமதர்மக் கட்சியின் கிளைக் காரியாலயம் ஒன்று சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி றேட்டில் ஷைகட்சிப் பொதுக்காரியதரிசியான மிஸ்ரர் பீற்றர் கெநமனால்திறந்துவைக்கப்பட்டது. திறப்பு விழாவின்பின் மிஸ்ரர் கெனமன் செய்த ஓர் பிரசாரணத்தில் இலங்கையில் உள்ள சகல மக்களும் ஒற்றுமைகொண்டு ஏகாதிபத்திய வாதிகளைத் துரத்தியபின்னர்த்தான், நாட்டுமக்கள் அனைவரும் உஜ்ஜீவிக்க முடியும் என்றும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் செல்வாக்கு இங்கேயிருக்கும்வரை நாட்டுமக்களுக்கு விமோசனம் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு ஸ்ரீ எஸ். கே. கந்தையா தலைமை வகித்தார்.

**ஆங்ஸேனுக்கு மகத்தான வெற்றி**

பர்மா அரசியல்நிர்மாணசபைக்கு ஆங்ஸேனின் பாஸிஸ்டு எதிர்ப்புக் கட்சி அங்கத்தவர்களில் அநேகர் எதிர்ப்பில்லாமல் எற்கெனவே வெற்றியடைந் திருக்கின்றனர். நிர்மாணசபைக்குரிய ஸ்தானங்களில் அரைவாசிக்குமேல் இப்போது மேற்படி கட்சியாற்கைப்பற்றப்பட்டுவிட்டன.

### ஹிந்து வீரர்களே எழுமின்!

... பாரதி தோண்டன் ....

ஹிந்துமத வீரர்களே எழுமின் ஏழை
எளியவர்கள் படும்துயரைக் கேண்மின் நெஞ்சம்
நொந்துழன்று மனமுடைந்து நிலை குலைந்து
நோய்வாய்ப்பட் டுழலுகின்றார் நமது தோழர்
தஞ்சமென் வேறுமத மதனை நாடித்
தமதுசொந்த இந்துமதம் தனைத்து றந்தார்
"அஞ்சற்க" வென்றினிமேல் அன்னோர் தம்மை
ஆதரித்து நமதுமதம் வளர்க்க வாரீர்! 1

தொண்ட ரெல்லாம் ஒன்ருகக் கூடவேண்டும்
துதிபாடிப் பரமனையே வாழ்த்த வேண்டும்!
ஹிந்துமதக் கல்விமக்கட் களிக்க வேண்டும்!
எல்லவரும் நாள்தோறும் ஊரூ ராகச்
சென்றுநம திந்துமதம் செழிக்க வேண்டித்
தினந்தினமும் வாய்முரசு அறைதல் வேண்டும்!
இந்தமுறை தனிற்ரெண்டு இயற்றி எங்கும்
ஹிந்துமதம் இமயமென வளர்க்க வாரீர்! 2

—தொண்டன்

# இந்தியாவின் நேசம்

## அதனைக் கெடுக்கமுடியாது!

ஆசியமக்கள்மகாநாட்டுக்குச்சென்றிருந்தஇலங்கை பிரதிநிதிகள்சென்ற சனிக்கிழமை இலங்கைக்குமீண்டுவிட்டனர். இவர்களின் தலைவராகிய மிஸ்ரர் பண்டாரநாயக்கா ஓர் பத்திரிகை நிருபர்க்குப் பின் வருமாறு கூறினார்:

"இலங்கை இந்தியா சமபந்தமாக நான் பண்டிதர் நேருவுடன் சம்பாஷித்தேன். இலங்கையின் புதிய பாராளுமன்றம் அமைக்கப்பட்டதும் இந்தப் பிரச்சினை இன்னும் நன்கு விவாதிக்கப்படும்.

"இலங்கை—இந்திய [illegible] முழுவதையும் விவாதித்து, ஓர் முடிவுக்கு வரவேண்டுமேயன்றி, ஒன்றிரண்டு அம்சங்களைமாத்திரம் விவாதித்து முடிவு செய்வதாற் பயனில்லை என்று நான் பண்டிதர்க்குக் கூறினேன். அவர் அதனை ஒத்துக்கொண்டார். இருநாட்டு அரசியலும் ஓர் ஸ்திரமான நிலைக்கு வந்த பின்னர்த்தான் இச் சம்பாஷணைகளை ஆரம்பிக்கலாம் என்பதற்கும் பண்டிதர் நேரு சம்மதித்தார்.

"இவ்விஷயத்தில் எதும் கஷ்டம ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. இலங்கை—இந்தியா என்னும் இரு தேசங்களும் நேச பான்மையுடன் [illegible] இருக்கப்போகின்றன. அதனைக் கெடுக்க எவராலும்முடியாது."

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவை

[வித்துவான். பண்டிதர், திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள், B.A. (Hons) B.O.L.]

(முற்றொடர்)

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பருடைய இராமாயணத்தில் பல இடங்களில் நகைச்சுவை காணப்படுகிறது. உதாரணமாக இங்கு இரண்டொன்றை மாத்திரம் குறிப்பிடுகிறேன்.

ஒரு பூக்கொடியில் இருவகையான பூக்கள் இயல்பாய்ப் பூப்பதில்லையென்பது யாவருமறிந்ததொன்று ஒரு கொடியில் இரண்டுவகையான பூக்கள்-நீலமும் சிவப்புமாகிய வெவ்வேறு நிறங்களைக்கொண்ட பூக்கள்-பூத்திருக்கின்றன. இக்காட்சியைத்தான் அதிசயிக்கச் செய்யாது எங்கே புதுமை காணலாம், என்றலைந்து திரிபவர்கள் இதனைக் கண்டால் அடித்துத்துரத்தினாலும் விட்டுவிட்டுப் போவார்களா?

"நதியினுங் குளத்தும் பூவா நளி
னங்கள் குவளையோடு
மதிநுதல் வல்லிபூப்ப நோக்கிய
மாலைத்தும்பி
அதிசயமெய்திப் புக்குவீழ்ந்தன
அலைக்கப் போகா
புதியன கண்டபோழ்து விடுவரோ
புதுமைபார்ப்பார்"

என்று கம்பர் தீட்டியிருக்கும் சித்திரத்தை அகக் கண்ணால் கண்டவுடன் நகைக்காமல்இருக்கமுடியுமா? பெண்களுடைய முகத்தையும் கண்களையும் முறையே தாமரை குவளை மலர்கள் எனக்கருதி ஒரு கொடியில் இவை எவ்வாறு பூத்தன என்று அதிசயமெய்தி அவற்றில் வண்டுகள் படிகின்றன; கலைத்தாலும் விட்டுவிட்டுச் செல்ல மறுக்கின்றன. ஏன்? புதியன கண்டபோழ்து விடுவரோ புதுமை பார்ப்பார் என்று கம்பர் குத்தாமல் குத்திச் சொல்கின்றார், வண்டுகளுக்கு ஒரு 'அடி' அடிப்பதுடன் உலகத்திலுள்ள 'வம்பர்களுக்கும்' ஒரு சூடு போடுகிறார்.

வண்டுகளைப்பற்றி யிங்கு பேசும்பொழுது நளவெண்பாவிற புகழேந்திப் புலவர் கூறிய செய்தியொன்று ஞாபகத்துக்கு வருகிறது

பெண் ஒருத்தி சோலையிற் பூப்பறிக்கிறாள். அவளுடைய முகத்தைத் தாமரை என்று எண்ணி ஒரு வண்டு அதில் மொய்க்கிறது. அவள் உடனே தன் கையால் அதனைக் கலைக்கிறாள். அந்த வண்டு பறந்து போகிறதா? இல்லை. அவளுடைய கையைக் காந்தள்மலர் என்று நினைத்து அதிலும் பாய்கிறது. அவளுக்கு அச்சத்தினால் வேர்த்துவிட்டது. இந்நிகழ்ச்சியைத் தமயந்திக்கு நளமகாராசன் காட்டுகிறான்.

"மங்கையொருத்தி மலர்கொய்வாள்
வாண்முகத்தைப்
பங்கயமென் றெண்ணிப் படிவண்
டைச்-செங்கையாற்
காத்தாளக் கைம்மலரைக் காந்த
ளெனப் பாய்தலுமே
வேர்த்தாளக் காணென்றான் வேந்து"

இக்காலத்தில் பலருக்கும் பட்டப்பெயர்கள் வைத்து வழங்குகிறார்கள், பாடசாலைகளிற் கற்கும் சிறுவர்கள் தங்களுடைய ஆசிரியர்களுக்கும் பெயர்வைத்து வருகிறார்கள், இப்பெயர்களைப் படைக்கும் காரணங்கள் ஆச்சரியத்தையும் நகையையும் விளைவிக்கும். இப்படிப்பட்ட காரணங்களில் ஒன்றை நைடதச் செய்யுள் ஒன்றினால் நாம் அறிகிறோம். மனிதர்கள் மாத்திரமன்றித் தேவர்களும் பட்டம்வைத்து வந்தார்கள் என்று அச்செய்யுள் கூறுகிறது. இந்திரலோகத்தில் இந்திரனுடைய சபாமண்டபத்தில் கந்தருவர்கள் சூழ்ந்து நிற்ப இந்திரன் அரியாசனத்தில் இருக்கிறான். அங்கு சென்ற அன்னப்பறவை நளமகாராசனுடைய இசைப்பயிற்சியை எடுத்துவிரித்துக்கூறுகிறது அதனைக் கேட்ட இந்திரன் இசையில்வல்ல கந்தருவன் ஒருவனைப் பார்த்து 'நீ நளமகாராசனைப் போலப் பாடுவாயா என்று கேட்கிறான். கந்தருவன் அடக்கமும் உண்மையு முடையவனுகையால் "ஆகாதென்று கூறுகிறான். பாவம்! உடனே அவனுக்கும் 'ஆகா' என்று பட்டப்பெயர் வைத்து விடுகிறார்கள்.

"ஏகாவிசும்பின் நளன்பாடலை யரங்
கள் கூற
மாகாதிபன் இவ்வரிபாடல் வருங்
கொலென்று
பாசுறவிணை பயில்வோன் முகம்
பார்த்துரைப்ப
ஆகாதெனலால் அவர்க்கப் பெயர்
சேர்த்தினரே.'

தமிழ்ப்புலவர்களில் ஒளவையாருக்கு ஒரு தனிச்சிறப்புண்டு. ஏன்? தமிழ் மொழிக்கே ஒளவையாரால் ஒரு தனிப் பெருமையுண்டு. ஒளவையாரைப் போன்ற ஒரு பெண்பாற் புலவரை மற்றைய மொழிகள் இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை. மக்களை நல்வழிப்படுத்த ஒளவையார் நன்கு முயன்றாலும் நகைச்சுவையையும் அவர் மறந்துவிடவில்லை. சோழவரசனுக்கு,

"உப்புக்குப்பாடிப் புளிக்கும்
ஒரு கவிதை
ஒப்பிக்கும் என்றனுளம்" என்று அவர் கூறியுளார். இவர் பாடிய பல தனிப்பாடல்களில்அற்புதமானநகைச்சுவைகள் நிறைந்திருக்கின்றன.

தன் மனைவிக்கு மிகப் பயந்த ஒருவனிடம் ஒரு விருந்தினன் வந்துவிட்டான். வந்த விருந்தைத் திருப்பிப் போ என்று துரத்திவிடுவது தமிழ் மரபன்று. மனைவியோ மிகப் பொல்லாதவள்; காரியத்தை உடனே வெளியிட்டால், பிழைவந்துவிடும். ஆகையால் அவன் தன் மனைவிக்கருகிற் போய் அவளுடைய முகத்தைத் திருத்திக் கூந்தலைப் பிரித்துப் பேன் ஈர் முதலியவற்றை எடுக்கிறான், கொஞ்சநேரம் இத்தொண்டுகளைச் செய்துவிட்டு மெதுவாக, விருந்து வந்திருக்கிறதென்றுசொன்னான். அந்தச் சண்டாளி என்னசெய்தாள் என்று பாட்டிலேயே பாருங்கள்.

"இருந்து முகந்திருத்தி
ஈரோடு பேன்வாங்கி
விருந்து வந்ததென்று
விளம்ப—வருந்திமிக
ஆடினாள் பாடினாள்
ஆடிப்பழ முறத்தாள்
சாடினாள் ஓடோடத் தான்."

வசைமாரியும் பழஞ்சுளகுப் பூசையும்தான் அவன் செய்த தொண்டுகளுக்குக் கிடைத்த பலன்,

ஒருமுறை கம்பர், ஒளவையாரை 'அடீ' என்று பழிக்கவிரும்பி, ஆரைக் கீரைக்கும் அவருக்கும்சிலேடையாக 'ஒருகாலடீ நாலிலைப் பந்தலடீ'என்று என்று சொன்னாராம். உடனே தமிழன்னையாருக்குக் கோபம் வந்துவிட்டது கழுதையே, எருமையே, குட்டிச்சுவரே, குரங்கே அவலட்சணமே என்று பாடிக் கம்பரைத் தலைகுனியச் செய்தாராம். முதலிற் பாட்டையும் பின் கருத்தையும் பார்ப்போம்:

"எட்டேகா லட்சணமே
எமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை
வாகனமே—முட்டமேற்
கூரையில்லா வீடே
குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னாயடா?"

எட்டு என்பதைத் தமிழில் அ என்னும் எழுத்தாலுங் குறிப்பார். ஆகவே எட்டேகால் லட்சணமென்பது அவலட்சணத்தைக்குறிக்கிறது; யமனுடைய வாகனம் எருமை; பெரியம்மை என்பது மூதேவி அவளுடைய வாகனம் கழுதை; மேற் கூரையில்லாத வீடு குட்டிச் சுவராகவிருக்கும். ராமன் தூதுவன்குரங்கு; ஆரையடாசொன்னாயடா என்பது சிலேடையாக நீயவ்வாறு யாரையடா சொன்னாய் என்றும் ஆரைக்கீரையை அவ்வாறு சொன்னாயடா எனவும் கூறுகிறது.

—தொடரும்

## விளம்பரம்

மேலைப்புலோலி சொக்கன் சலட்டி
முத்துமாரி அம்மன் கோவில்
தருமபரிபாலன சபை

1947-ம் ஆண்டு பங்குனி மாசம் 3ம் திகதி திங்கட்கிழமை பின்னேரம் 4 மணியளவில் ஷை கோவில் மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது.

அத்தருணம் பல அவசிய பிரேரணைகள் சபைமுன் கொண்டு வரப்பட்டு முறையே நிறைவேறியது

அன்றியும் ஷை கோவில் உதவி மனேஜர் வேலப்பர் ஆழ்வாப்பிள்ளையை, அவரில்கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகள்

1 கோவில்சொத்துக்களை அபகரித்தல்
2 கோவில் கணக்குகளைச் சமர்ப்பிக்கத் தவறல்.
3 கோவில் கிரம ஒழுங்குகள் யாவும் தவறல்

ஆகியவைகளில் அவரைக் குற்றவாளியாகக் கண்டும், இன்னும் நிருவாகசபை அங்கத்தவர்களில் ஐவராகிய

1 நாராயணர் சுப்பிரமணியம்,
2 மு. சிதம்பரப்பிள்ளை கணபதிப்பிள்ளை
3 முருகர் வேலுப்பிள்ளை
4 தாமு பெரியதம்பி
5 ஆறுமுகம் இராமலிங்கம்

என்பவர்களும் ஷை உதவி மனேஜர் வே. ஆழ்வாப்பிள்ளைக்கு இக்குற்றங்கள் செய்வதற்கு ஒத்தாசையாக இருந்தும் உதவிபுரிந்தும் கூடியும் கோவில் அபிவிருத்திக்குப் பாதகமாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டுகளிலும் இவர்கள் ஐவரையும் முறையே குற்றவாளிகளாகக் கண்டும், நொத்தாரிஸ் பரமு சிதம்பரப்பிள்ளை முகதாவில் 1919-ம் ஆண்டு வைகாசி மாதம் 5ம் திகதி 15548-ம் இலக்கத்தில் முடிந்த அதிகார நியமனச் சாதனத்தின் பத்தாவது விதானத்தின்படி மேற்படி உதவி மனேஜர் வேலப்பர் ஆழ்வாப்பிள்ளையையும் மேற்படி நிருவாக சபை அங்கத்தவர்களாகிய

1 நாராயணர் சுப்பிரமணியம்
2 மு. சிதம்பரப்பிள்ளை கணபதிப்பிள்ளை
3 முருகர் வேலுப்பிள்ளை
4 தாமு பெரியதம்பி
5 ஆறுமுகம் இராமலிங்கம்

ஆகிய ஐவரையும் அவர் அவர் ஸ்தானங்களிலிருந்து இன்று இங்கு கூடியிருக்கும் மேற்படி கோயில் தர்மபரிபாலன சபையின் பொதுக்கூட்டத்தாராகிய நாங்கள் நீக்குகிறோம் என புலோலி மேற்கு ஸ்ரீமான் வெற்றியர் வல்லிபுரம் பிரேரிக்கவும் ஸ்ரீமான் கணபதிப்பிள்ளை தம்பிராசா அனுவதிக்கவும் மேற்படி சபையின் சர்வசம்மதத்துடன் நிறைவேறியது.

சி. சிதம்பரப்பிள்ளை
ஷை சபையின் அக்கிராசனர்

புலோலி மேற்கு 10—3—47.

Mis. 3 — 4, 7. 11-4-47

## விளம்பரம்

வடமாகாணத்திலிருக்கும் யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை றோட்டில் 1/9ம் 2/9 ம் 4/9ம் நம்பருள்ள கதவுகளில் தண்ணீர் மறிப்புப் கதவுகள் போடுவதற்கு வடமாகாண ஏசண்டரவர்கள் 1947-ம் ஆண்டு சித்திரை மாதம் 29-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்குள், குறித்த விண்ணப்பப்பத்திரங்கள் (ரெண்டர்களை) ஏற்றுக்கொள்வார்.

விண்ணப்பப் பத்திரங்கள் ரூபாய் (ஐம்பது) 50 கட்டி வடமாகாண ஏசண்டரின் கையொப்பம் சாத்தப்பட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும் ரெண்டர் பத்திரங்கள் 1947-ம் ஆண்டு சித்திரை மாதம் 26 ம் திகதி சனிக்கிழமை பகல் 12 மணிக்குள் கொடுக்கப்படும்.

மறுவிபரங்களை அவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

G 7 8-4-47

## திருச்சி ரேடியோ

புதன் ஏப்ரல் 9

காலை 7 15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 எ ராமகிருஷ்ணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வானொலி வாத்யகோஷ்டி 8-30 வி அபயாம்பாள் பாட்டு 9 முடிவு,

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 வி அபயாம்பாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 வி அபயாம்பாள் பாட்டு 2-15 கோடைக்கல்வி 2-45 முடிவு.

மாலை 5 டி குருராஜப்பா வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 கிருஷ்ணன் மதுரம் இசைத்தட்டு 7-15 புதிய வெளியீடுகள் 7 30 தமிழில் செய்திகள் 7-45 இசைக்குப் புத்துயிர் 8 எ ராமகிருஷ்ணன் பாட்டு 8-30 டி குருராஜப்பா வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஐரோப்பிய சங்கீதம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஆங்கிலத்தில் செய்திகள் 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

வியாழன் ஏப்ரல் 10

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஆந்தகுடி ஆர் ராமமூர்த்தி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலைஇசை 8 30 எஸ் பாண்டுரங்க பாவதர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஆந்தகுடி ஆர் ராமமூர்த்தி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 ஆந்தகுடி ஆர் ராமமூர்த்தி பாட்டு 2-15 கோடைக்கல்வி 2-45 முடிவு.

மாலை 5 வி எஸ் கிருஷ்ணமூர்த்திராவ் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7-15 செய்திவிளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 தஞ்சாவூர் கே பி சிவானந்தம் வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 மந்திரத்தில் மாங்காய் நாடகம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 வி எஸ் கிருஷ்ணமூர்த்திராவ் பாட்டு 10-30 முடிவு.

வெள்ளி ஏப்ரல் 11

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எம் ஆர் வாசவாம்பாள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 பி முத்துச்சாமி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எம் ஆர் வாசவாம்பாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 எம் ஆர் வாசவாம்பாள் பாட்டு 2 15 கோடைக்கல்வி 2-45 முடிவு.

5 எஸ் நடராசன் பாட்டு 5-40 நாரான் வ, ரீப 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 அருப்புக்கோட்டை எஸ் கணேசபிள்ளை நாஸ்வரம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 இடமில்லை 8 பி எஸ் நடராசன் பாட்டு 8-30 அருப்புக்கோட்டை எஸ் கணேசபிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்கள் 9-15 இருகுரலிசை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 கடத்தூர் சங்கராமையர் வீணை 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

## விளம்பரம்

வடமாகாணம் சாவகச்சேரி, சங்குப்பிட்டி நீர்ப்பெருக்கு வாய்க்கால்களிலுள்ள வரம்பைப் பெலப்படுத்துவதற்கும் புற்கத்தை அடிப்பதற்கும், அவ்வாய்க்கால்களிலுள்ள "றெகுலேற்றருக்குப் பூட்டுகள்போடுவதற்கும், வடமாகாணப் பகுதி ஏஜண்டரவர்கள் 1947-ம் ஆண்டு சித்திரை மாதம் 29-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்குள் குறித்த (ரெண்டர்) விண்ணப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

விண்ணப்பப்பத்திரங்கள், ரூபாய் ஐம்பது (50) கட்டி வடமாகாண ஏஜண்டரின் கையொப்பம் சாத்தப்பட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும் ரெண்டர் பத்ரங்கள 1947-ம் ஆண்டு சித்திரை மாதம் 26-ந் திகதி பகல் 12 மணிக்குள் கொடுக்கப்படும்.

மறுவிபரங்களை அவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

G 11 8.4.47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## சரவணப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

பிறையு லாஞ்சடைத் தேவனு மவன்றனைப் பிரியா
துறையு மாதுமோ ரறுவகை யுருவுகோண் டுற்ற
சிறுவ னீர்மையை நோக்கியே திருவருள் செய்து
நிறையும் வான்புனற் பொய்கையங் கரையிடை நின்றார்.

பிறைச் சந்திரன் தவழுகின்ற சடைமுடியினையுடைய தேவாதிதேவரா கிய கைலாசபதியும், அந்தப் பெருமானை நீங்காதெழுந்தருளிய உமாதேவி யாரும் ஒரே இயல்பான ஆறு திருவடிவங்களாகி விளங்குகின்ற பாலசுப் பிரமணியப் பெருமானுடைய இயல்பைப் பார்த்துத் திருவருள் சுரந்து நீர் வளம் நிறைந்த தூய சரவண வாவித் தடாகத்தின் கரையில் எழுந்தருளி நின்றனரென்பது கருத்து.

இறைவி இறைவனை இடையிடையே பிரிந்து பின்னர்ச் சேர்ந்ததாகப் புராணங்களிற் சொல்லப்படுகின்றனவெல்லாம் இறைவிபின் அருள்வடி வத்தையர்குமாதலானும் சத்தியும் சிவமும் ஒன்றுமென்பது சித்தாந்தமாத லானும் இங்கே "தேவனும் அவன்றனைப் பிரியயாதுறையுமாதும்" என்றார்; கார்த்திகைப்பெண்கள் அறுவர்பொருட்டுக் குமரவேள் முன்னர், "அறுமுக வொருவன் வேறு யறுசிறு ருருவங் கொண்டான்" ஆதலின், இங்கே "....... ஓர் அறுவகை யுருவுகொண்டுள்ள சிறுவன்" என்றாரென்க; நீர்மை இங்கே பரத்துவம். (17)

முண்ட சச்சர வணந்தனின் மூவிரு வடிவங்
கோண்டு லாவிவீற் றிருந்திடு மொருபெருங் குமரன்
அண்டர் நாயகன் றன்னுட னகிலமீன் றாளைக்
கண்டு மாமுக மலர்ந்தனன் றனதுளங் களித்தான்.

தாமரைப் பூக்கள் பொருந்திய சரவணத் தடாகத்தின்கண்ணே ஆறு திருவடிவங்களைக் கொண்டவராய்த் திருவிளையாடல் செய்துலாவி அங்குள் ளதாகிய ஒரு செந்தாமரைப் பூவின்கண்ணே யெழுந்தருளியிருந்த குமாரக் கடவுள், தேவாதிதேவராகிய கைலாயபதியுடன் உலக மாதாவாகிய உமா தேவியாரும் அங்கேயெழுந்தருளி வருதலைப் பார்த்துத் தமது திருமுகங் கள் மலரப்பெற்றுத் திருவுள மகிழ்ச்சியடைந்தார் என்பது கருத்து..

கார்த்திகைப் பெண்கள் அறுவர்பொருட்டும் ஆறு திருவடிவங்கொண் டுலாவிய குமரவேள் பெருமானும் பெருமாட்டியும் ஆங்கு எழுந்தருளிய சமயத்திற் செந்தாமரைப் பூவில் வீற்றிருந்தாராதலின், "மூவிரு வடிவங் கொண் டுலாவிவீற் றிருந்திடு மொருவன்" என்றார், "........அறுமுக வுரு வாய்த் தோன்றி யருளொடு சரவணத்தின் - வெறிகமழ் கமலப்போதின் வீற்றிருந் தருளினனே" என முன்னர்க் கூறப்பட்டிருத்தலின் "செந்தாம ரைப் பூவின் கண்ணே" யென்பது இங்கு வருவித்துக் கூறப்பட்டது; சிறிது வேளை தாம் பிரிந்திருந்த இறைவனையும் இறைவியையும் ஆங்கு மீண்டு தரி சித்தனராதலின் "........கண்டு மாமுக மலர்ந்தனன் றனதுளங் களித்தான்' என்றவாறும், (18)

அந்த வேளையிற் கவுரியை நோக்கியெம் மையன்
இந்த நின்மகன் றனைக்கொடு வருகென வியம்பச்
சுந்த ரங்கெழு விடையினுந் துணணென விழிந்து
சிந்தை கேண்டபே ராதரந் தன்னொடுஞ் சென்றாள்.

அப்பொழுது எங்கள் பரம பிதாவாகிய சிவபிரான் உமாதேவியாரைப் பார்த்தருளி, "இத்தடாகத்திலிருக்கின்ற உனது மகனைக் கொண்டுவருதி" எனத் திருவாய்மலர்ந்தருளுதலும், தேவியார் அழகு விளங்கும் இடபவாக னத்திலிருந்து உடனே இறங்கி திருவுளத்தில் நிறைந்த பேரன்புடன் சென் றருளினர் என்பது கருத்து.

சிவகுமாரர் எனப்படும் விநாயகர், பைரவர், வீரபத்திரரென்னும் மூவரோடு இந்த முருகவேளும் எம் நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றினும் நின் மகனேயாவன் எனத் தேவி திருவுள்ளத்தில் மேலும அதிக ஆர்வத் தைப் பிறப்பிக்கும் வணணம் "இந்தநின்மகன்" எனக் கூறியருளினர் போலும்; தருமதேவதையின் அவதாரமாய்த் தூய வெண்ணிறம் பொருந் தியதாய்த் இறைவனையும் இறைவியையும் பரிக்கும் பாக்கியம் பெற்றதாய் விளங்கும் விடையாதலின் சுந்தரங்கெழு விடையென்றார். (19)

சரவ ணந்தனிற் றனதுசே யாறுருத் தனையும்
இருக ரங்களா லன்புட னெடுத்தனள் புல்லித்
திருமு கங்களோ ராறுபன் னிருபுயஞ் சேர்ந்த
வுருவ மோன்றெனச் செய்தன ளுலகமீன் றுடையாள்.

சகல உலகங்களையும் பெற்றுக் காப்பவராகிய ஈசுவரியார் சரவணப் பொய்கையிலிருக்கும் தமது திருக்குமாரரின் ஆறு வடிவங்களையும் தமது அருமைத் திருக்கரங்களாற் பேரன்போடு பற்றியெடுத்து அணைத்து அறு திருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களுங் கூடிய ஒரு திருவடிவாகச் செய் தருளினர் என்பது கருத்து.

சகல புவனங்களிலுமுள்ள சராசரங்களையெல்லாம் படைத்துக் காத் தருளும் பெருமாட்டிக்குத் தமது அருமைத் திருக்குமாரர் கொண்டுள்ள ஆறு திருவுருவங்களையும் ஒன்றுசேர்த்தல் அரிதன்றென்பார், உலகமீன் றுடையாள் என்றார்; குமரவேள் கொண்டுள்ள திருவடிவங்களனந்தமாக, இச்சண்முக மூர்த்தமுமொன்றெனத் தியானித்து மெய்யன்பர் வழுத்தும் வண்ணம் அகிலாண்ட நாயகியார் செய்தாரென்பார், உருவமொன்றெனச் செய்தனரென்னுது "உருவமொன்றெனச் செய்தனள்" என்றார். (20)

# செய்தித் திரட்டு

சீனத்துத் தலைவரான சியாங்கே-ஷேயிக் இன்னுஞ் சில தினங்களில் அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் விஜயஞ் செய்வர் என்று ஓர் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது.

* *

சென்றவாரம் நோர்வே, அமெரிக்கா என்னும் இரு நாடுகளிலு மிருந்து இந்தியாவில் 1000 இறத்தல் தங்கம் இறக்குமதியானது.

* *

இந்தனேஷியப் பிரதமர் டக்டர் சுல்தான் ஷாரீர் சென்றவாரம் இந்திய ராஜப் பிரதிநிதி மவுன்ற்பேற்றன் பிரபுவைச் சந்தித்து அவருடன் போசனம் அருந்தினர்.

* *

இப்போது பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரியாயுள்ள மீஸ்ரர் ஏணெஸ்ட் பீவன், இன்னும் சில தினங்களில் இப்போது தாம் வகித்த பதவியி னின்றும் விலகி, பிரிட்டிஷ் பொருளாதார நிலையை அமைக்கும் ஓர் பெரிய பகுதிக்குத் தலைவராகலாம் என்று ஓர் செய்தி கூறுகிறது.

* *

யாழ்ப்பாணப் பட்டினத் தொகுதிக்கு அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் அபேட்சகாக வரும் ஸ்ரீ அ மகாதேவாவை ஆதரிக்கும் பொருட்டு, சென்ற ஞாயிற்றுக் கிழமை வண்ணார்பண்ணை, கோட்டடியில் ஓர் கூட்டம் நடைபெற்றது.

* *

இந்தியாவில் அமெரிக்காவின் இராஜ ரீகத்தூதராக மீஸ்ரர் ஹென்றி கிராடி என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறர் என்று ஓர் செய்தி கூறுகிறது.

## விளம்பரம்

யாழ்ப்பாணம் வடமாகாணத்தி லிருக்கும் யாழ்ப்பாணம் ஊர்காவத்துறை றோட்டிலிருக்கும் 4/4-ம் 1/5 ம் நம்பருள்ள மதவுகளில் தண்ணீர் மறிப்புக் கதவுகள் போடுவதற்கு வடமாகாண ஏஜண்டரவர்கள் 1947-ம் ஆண்டு, சித்திரை மாதம் 22-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணியளவில் குறித்த விண்ணப்பப்பத்திரங்கள் (ரெண்டர்களை) ஏற்றுக் கொள்வார்.

விண்ணப்பப்பத்திரங்கள் ரூபாய் ஐம்பதுகட்டி வடமாகாண ஏசண்டரின் கை ஒப்பம் சாத்தப்பட்ட ஒவ்வொரு பற்றுச் சீட்டிற்கும் ரெண்டர் பத்திரங்கள் 1947 ம் ஆண்டு சித்திரைமாதம் 19-ம் திகதி பகல் 12 மணிக்குள் (குறித்த ரெண்டர் பத்திரங்கள்) கொடுக்கப்படும்.

மறுவிபரங்களை அவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ம ஸ்ரீ கந்தா
வடமாகாண ஏசண்டருக்காக

கச்சேரி
யாழ்ப்பாணம்
31—3—47.

G 5 8-4-47

## தானவரவு

இணுவில் தம்பளாவத்தையை ஜெனன பூமியாகக் கொண்டவரும், சண்டிருப்பாயை வாசஸ்தானமாகக் கொண்டவரும் பரம்பரைச் சைவவேளாண் மரபைச் சேர்ந்தவரும் 1944-ம் ஆண்டு பங்குனி மாசம் காலஞ்சென்றவருமாகிய முருகேசர் கணபதிப்பிள்ளை அவர்களின் மூன்றும் வருடம் 22 ந் தேதி (4-4-47) வெள்ளிக் கிழமையன்று பண்டிதர் ஞானசேகரனவர்களால் அன்னாரின் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்கு நன்கொடையாக வரித்தனுப்பிய ரூபா 2 பெற்றும்,

மனேஜர்

காலநிலை

இன்று இங்கே மழைபெய்கிறது,

## ஒரு நீலி செய்த குரூரச் செயல்

யுத்தகாலக் குற்றவாளிகளை விசாரணைசெய்தற்கேற்பட்ட இடமாகிய டாச்சோ என்னுமிடத்துள்ள இராணுவ நீதி[illegible]த்தில், யுத்தகாலத்தில் அக்கிரமஞ் செய்தார்களென்று குற்றஞ்சாட்டப்பட்ட (பகைவருக்குரியரான) பல ஆண்களும் பெண்களும் விசாரணை செய்யப்படுகிறார்கள்; அவர்களுள் முந்திய ஜெர்மனிய சேனாதிபதியான கொஷ் என்பவருடைய மனைவியு மொருத்தி; அவள் இப்பொழுது கைம்மையாயிருக்கிறாள்; இவள் அக்காலத்திலே சிறைப்படுத்தப்பட்ட பகைவருள் ஆண்களாக பெண்களாக தங்கள் அங்கத்திலே பச்சைகுத்தியிருப்பக் கண்டால் அவர்கள் உயிரோடிருக்கவே அவருடைய தோலிற் பச்சைகுத்தின பாகத்தை மாத்திரம் உரித்துப் பல வகையில் உபயோகிப்பாளாம்; அப்படிப் பச்சை குத்தப்பட்ட தோலையுரித்து ஆக்கப்பட்டதாகிய ஒரு தட்டினைத் தான் வைத்திருந்த விளக்குக்கு "ஷேட்" எனப்படும் தட்டாக மாட்டியிருந்தாளாம்; இவள் அந்த நேரத்திலே செய்த அக்கிரமங்கள் பலவாம்; வயசு 40 என்றாலும் இளமையோடு காணப்படுகிறாளாம். நீதி மன்றத்தார் கேட்குங் கேள்விகளுக்கெல்லாம் அச்சமின்றித் துணிவுடன் விடை கூறுகிறாளாம்,

## விளம்பரம்

தெல்லிப்பழையி லிருக்கும் கருகம்பானைக்கும் உச்சிலைக் குளத்திற்கு மிடையில் இருக்கும் தொல்லை நீர்வாய்க்காலைப் பெருப்பிப்பதற்கும், மட்டப்படுத்துவதற்கும் வடமாகாண ஏசண்ட ரவர்கள் 1947-ம் ஆண்டு சித்திரை மாதம் 22-ந் தேதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணியளவில் குறித்த விண்ணப்பப் பத்திரங்கள் ரெண்டர்களை) ஏற்றுக்கொள்வார்.

விண்ணப்பப் பத்திரங்கள் ரூபா ஐம்பது (50) கட்டி வடமாகாண ஏசண்டரின் கையொப்பம் சாத்தப்பட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டிற்கும் ரெண்டர் பத்திரங்கள் 1947-ம் ஆண்டு சித்திரைமாதம் சனிக்கிழமை 19 ந் திகதி பகல் 12மணிக்குள் (குறித்த ரெண்டர் பத்திரங்கள்) கொடுக்கப்படும்.

மறு விபரங்களை அவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ம. ஸ்ரீ கந்தா
வடமாகாண ஏசண்டருக்காக

கச்சேரி
யாழ்ப்பாணம்
31—3—47

G 9 8—4—47

உங்கள் வியாபாரம்

விருத்தியுற

வேண்டுமா?

*

அப்படியானல்

இந்துசாதனத்தில்

விளம்பரஞ் செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயங்களிற் பலியிடுதல்

1-ம் பக்கத் தொடர்ச்சி

கள் சமயத்துக்குப் பிறசத்துருக்க ளும் வேண்டுமா?

எங்கள் சமயக்க[illegible]முழுமுதற் பொருளாகிய சிவபெரு[illegible]ன் சிவாலயங்களில் மிருகபலியிடாமைக்குக் காரணம் அது அவர்க்குப் பிரீதியன்றென்பதுபற்றியன்றோ! இங்ஙனம் அவருக்குப் பிரீதியில்லாததொன்றை அவரது ஆஞ்ஞையுள் அமைந்துள்ள முனியப்பர், பிடாரி, காளி, ஐயனார் முதலிய தெய்வங்கட்குப் பிரீதி எனக் கருதி நாங்கள் செய்யலாமா? எங்களுடைய புராதன சரித்திரங்களை ஆராயுமிடத்து இவ்வழக்கம்வேட்டுவர்களுக்குள்ளேயே முன்னுள்ளதாகக் காணப்படுகிறது. ஒரு சிறு புழு வருந்தச் சகியாத நாங்கள் எத்தனையோ ஆடுகளையும், கோழிகளையும் கதறக் கதற வெட்டச் சகிப்போமா! ஐயையோ! எவ்வளவு பாவம்! பாவம்!! ஆடுகள் கோழிகள்வெட்டப்படுதலைக் கூசாது நின்று கண்டவர்கட்கு ஒரு மனுஷனைக் கொல்லக் காணுதலும், பின் கொல்லுதலும் அருமையல்ல மாமிசம் புசியாதவர்களுக்கு முன் கோழியொன்றை அறுத்தால் அவர்கட்கு அதைக்காண எவ்வளவு பதைபதைப்பா யிருக்கின்றது; காணக் காண எதுவும் பழக்கமாய்விடும்.

சைவசமயிகளாகிய எங்கட்கு எங்கள் சமயத்தைச் செவ்வனே பரிபாலித்தல்போலும் புண்ணியம் வேறில்லை. எம் சமயிகள் இவ்விஷயத்தைக் குறித்துச் சிறிதாயினும் சிந்தியாதொழிவது எங்கள் நாடு செய்து கொண்ட தவக்குறைபோலும்; ஆலயங்களைக் கட்டியென்ன, மற்றைத் தருமங்களைச் செய்தென்ன. இவைகளெல்லாம் சமய அறிவு தலைப்பட்டாலன்றோ பயன்படும். இக்காரணம் பற்றியன்றோ இக்காலத்திலே அநேக கோயில்கள், மடங்கள் ஈனஸ்திதியிலே கிடக்க நேரிட்டன. எங்கள் ஊரார் திருவிழாக்களிலும், கச்சேரிகளிலும் பெரும்பொருள் செலவிடுகின்றாரேயன்றிச் சமய விருத்திக்காகச் சற்றும் செலவிடுதலைக் காண்கிலேம். அந்நிய சமயத்தார் கோவில்களில் செலவிடும் தொகை மிகச் சொற்பம் சமய விருத்திக்காகச் செலவிடுந் தொகை பன்மடங்கதிகம். இது பற்றியன்றோ அவர்கள்சமயம் விரைந்து பரவுகின்றது.

ஒவ்வோர் ஊரிலும் ஆங்காங்கே ஒவ்வோர் சபையினை நிறுவி அதுவாயிலாக எங்கள் சமயத்தை விருத்தி செய்வதோடு, எங்கேனும் மிருகபலியிடக் கண்டால், தம் மிருகபலியினைத் தடுத்து, ஆலயங்களையும் செவ்வனே பரிபாலித்து சமயப் பிரசங்கங்களும் புரிந்துவருவரேல் எங்கள் சமயம் மேலோங்கும். எங்கள் சிறுபிள்ளைகட்குச் சமய அறிவை ஊட்டி, தேவார திருவாசகம் கற்பித்து எங்கள் சமய உண்மைகளை ஊட்டல் வேண்டும். சிறுபிராயத்திலே அவர்கட்குச் சமய தீக்ஷை வைத்து, நித்திய கரும விதிகளைச் செவ்வனே அநுட்டிக்கச் செய்தல்வேண்டும்.

கொல்லா விரதம் குவலய மெல்லாம் ஓங்க
எல்லார்க்குஞ் சொல்லுவ தென்னிச்சை பராபரமே.
—தாயுமானவர்

விளம்பரமின்றேல் பெரும்பணமில்லை

## ஸ்ரீ சத்தியோசாத சிவாசாரியர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கந்தசுவாமிக்கு நவகுண்ட பக்ஷமாக ஓமஞ்செய்யுமிடத்துப் பிரதான குண்டம் அறுகோணமெனக் காரணாகமமும் குமாரதந்திரமும் விதிக்கின்றன. ஆகம விரோதமாக சிவாசாரியர் விருத்தகுண்டம் பிரதானமென்று பாடிவிட்டார்.

காரணம் முதலிய ஆகமங்கள் இருபத்தைந்துமூர்த்தி பேதங்கட்கும் குண்டம் போடுமிடத்தில், மூர்த்தங்கட்கேற்ற பிரகாரம் நவகுண்டங்களிற சில மாற்றங்களைச் செப்புகின்றன. சிவாசாரியர், சிவலிங்கப்பிரதிஷ்டையிற் போடுவதுபோலப் போடுக" என்றெழுதியிருக்கிறாரே! இது சிவாகம விரோதமாகாதா?

ஆபத்துத்தாரண பைரவருக்கு நவகுண்ட பக்ஷத்தில் பிரதானம் பஞ்சகோணமென்று சிவாகமங்கள் கூறுகின்றன. ச. பொ. குருக்களும் காரணாகம விதியை அநுசரித்து, ஆபதுத்தாரணப் பிரதிட்டையில் பஞ்சகோண குண்டம் பிரதானமென்று இப்பத்திரிகையில் எழுதியிருந்தார். எல்லாத் தேவர்களுக்கும் பிரதான குண்டம் விருத்தமெனவும், பஞ்சகோண குண்டத்தைப் பிரதிட்டையில் நீக்குதல் வேண்டுமெனவும் சிவாகமத்துக்கு மாறாகப் பச்சாம்பேட்டையார் நவீனகாமிகத்தில் பாடியிருக்கிறார். இந்த விஷயத்தில் ச. பொ. சத்தியோசாதரைக் கைவிட்டனர்.

கிருத்தமூர்த்தி காமாரி கசாரி திரிபுராரி சலந்தராரி என்னும் மூர்த்திதங்களுக்கு நவகுண்ட பக்ஷத்திற் பிரதானகுண்டம் எழுகோணகுண்டமென்று காரணாகமத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. சிவயாகத்தில் நவகுண்டபக்ஷத்தில் ஒரு குண்டம் ஐங்கோணமெனவும், அவ்வாகமத்திற்றானே கூறப்பட்டது. சிவாசாரியர் சிவாகமங்களுக்கு விரோதமாக எழுகோணம் ஐங்கோணங்களையுடைய குண்டங்களைப் பிரதிட்டையில் நீக்குதல்வேண்டும். இதற்குவிரோதமாகச் செய்வாராயின் அரசனுக்கும் இராச்சியத்துக்கும் தோஷமுண்டாமென்று கற்பனை செய்துவிட்டார். (வரும்)

### தேவை

அராலி சரஸ்வதி வித்தியாசாலைக்கு ஆங்கிலம் S. S. C. அல்லது மற்றிக் சித்தியெய்திய ஓர் மேலதிக ஆசிரியர் தேவை. விரும்புவோர் 20-4-47 க்கு முன்னர் மானேசருக்கு விண்ணப்பஞ் செய்துகொள்க. சித்திரக்கலையுடையோர்க்கு விசேடமதிப்புண்டு.

விலாசம்;—

மானேசர்
சரஸ்வதி வித்தியாசாலை
அராலி தெற்கு
வட்டுக்கோட்டை

M. 5 8—11-4-47

### புதுவருட வாழ்த்துப் பத்திரங்கள்

இவை 'யாழ்ப்பாணன்' புனைந்துள்ள மங்களகரமான இரு கவிதைகள் கொண்டு மிளிரும் இரண்டு இனங்கள். ஒன்றன் விலை 25 சதம். 5 பத்திரங்களுக்கு விலை ரூபா 1-00. 100 பத்திரங்களுக்கு விலை ரூபா 15-00 வேண்டுவோர் முற்பணமனுப்புக தபாற்செலவு இனாம். பிரபல புத்தகசாலைகளிலும் நியூஸ் ஏஜண்டுகளிடமும் பெறலாகும். மாதிரிப் பத்திரம் வேண்டுவோர் 25 சதத்துக்கு முத்திரைகள் அனுப்புக.

விலாசம்:

1 லடலக்கா ப[illegible]கசாலை பருத்தித்துறை
2 S. S. சண்[illegible]
யாழ்ப்[illegible]

Mis .1 4, 8, 11-4-47

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்.

Mis 246 20-11-46—20-11-47 (தி)

## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் சட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
இ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to , 1—4—48

## கந்தசாமி வைத்தியர் அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளைமாற்றி நல்ல பசிஉண்டாக்கும் மேகம் மேசத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி ஆரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும், கருவை அழியாமல் காக்கும் பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம், சிறியவர்கள் காற் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் றுத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மேடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Mis 211 1-11—30-4 (செ)

## இந்துசாதனம்
### ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு. |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, April, 8, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org